# பொருளியல்

## பேரினப் பொருளாதார சமநிலை



e தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சிமட்டம் - 6.1

## பேரினப் பொருளாதார சமநிலை.

மொத்த வெளியீட்டின் பெறுமதிக்குச் சமனான மொத்தக் கேள்வி காணப்படும் சந்தர்ப்பம் ஆகும். எனவே இந்நிலையில் மொத்தக்கேள்வியை ஈடுசெய்ய போதுமான மொத்த நிரம்பலொன்று காணப்படும்.

எனவே யாதேனும் ஒரு தேசியவருமான மட்டமானது அதன் பெறுமதியிருந்து மேல் நோக்கியோ அல்லது கீழ்நோக்கியோ மாற்றமடையும் போக்கை கொண்டிருக்காத ஒரு நிலையே பேரினப் பொருளியல் சமநிலை எனப்படும்.

இதன் போது மொத்த உற்பத்தியும் மொத்த வேலைவாய்ப்புமட்டமும் தளம்பலின்றி காணப்படும். எனவே இச்சமநிலை பேரினப் பொருளாதார உறுதிக்கு அவசியமாகின்றது.

பேரினப் பொருளாதார சமநிலை எடுத்துக்காட்டும் வழிகள்.

1. மொத்த வருமானம் = மொத்தச் செலவு அணுகுமுறை.
   $Y = E$
2. வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல் அணுகுமுறை.
   $W = J$
3. மொத்தக் கேள்வி = மொத்த நிரம்பல் அணுகுமுறை.
   $AD = AS$

- மொத்தக் கேள்வி/மொத்தச் செலவு என்பது பொருளாதார இயக்கிகள் குறித்த காலத்தில் மேற்கொண்ட செலவீடுகளைக் குறிக்கும். எனவே இதன் கூறுகள் $AD = C + I + G + NX$
- மொத்த நிரம்பல்/மொத்த வருமானம் என்பது குறித்த காலப்பகுதி உற்பத்தியின் போது உருவாகும் வருமானங்கள் ஆகும். எனவே அதன் கூறுகள் $AS = C + S + T + M$
- மேற்கூறியவற்றின் அடிப்படையில் AD = AS ஆகும் போது பேரினப் பொருளாதார சமநிலை அடையப்படுகின்றது.




தொகுப்பு : திரு.ஆ.பிரபாகரன், ஆசிரியர் - பொருளியல், (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- **வெளிப்பாய்சல்கள்.**
  ஒரு பொருளாதாரத்தின் மொத்தக்கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் மாறிகள் வெளிப்பாய்சல்கள் ஆகும். இவை வருமானச் சுற்றோட்டத்தில் வருமான அளவைக் குறை-வடையச் செய்யும்.

  - திறந்த பொருளாதாரம் ஒன்றின் வெளிப்பாய்ச்சல் கூறுகளாவன
    1. சேமிப்பு (S)
    2. வரிகள் (T)
    3. இறக்குமதிகள் (M)
  - வெளிப்பாய்ச்சல்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு மீது நிறுவனங்கள் அல்லது வீட்டுத்துறையினர் செலவிடப்படாதவையாகும்.

- **உட்பாய்ச்சல்கள்**
  ஒரு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் அதிகரிப்பை ஏற்படுத்தும் மாறிகள் உட்பாய்ச்சல்களாகும். இவை வருமானச் சுற்றோட்டத்தில் வருமான அளவை அதிகரிக்கச் செய்கின்றன.

  - திறந்த பொருளாதாரம் ஒன்றின் உட்பாய்ச்சல் கூறுகளாவன
    1. முதலீடு (I)
    2. அரசாங்கக் கொள்வனவுகள் (G)
    3. ஏற்றுமதிகள் (X)

  - உட்பாய்ச்சல்கள் ஏனைய குழுவின் செலவினத்திலிருந்து உருவாகாத நி-றுவனங்களினால் அல்லது வீட்டுத்துறையினரால் பெற்றுக்கொள்ளப்படும் கொடுப்பனவுகளாகும்.

  - மேற்கூறிய வகையிலான மொத்த வெளிப்பாய்சல்கள் உட்பாய்ச்சல்களுக்கு சமனாகும் போது பேரினப் பொருளாதார சமநிலை அடையப்படுகின்றது.

$$W = J$$
$$S + T + M = I + G + X$$


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk